எம்.சி.ஓ.பி எண்: 822/2024 தேதி: 08.06.2026

மசா. : 1

பெயர் :ரஞ்சிதா

த/பெ. :துரை

வயது :32

<u>**சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்**</u>

<u>**முதல் விசராணை**</u>

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணம் மசாஆ13 ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இந்த விபத்தை நான் நேரடியாக பாா்க்கவில்லை. நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் மருத்துவம் சம்பந்தமான எந்த படிப்பும் படிக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் பேரா 1 இல் மருத்துவ சம்பந்தமான விவரங்கள் கூறப்பட்டுள்ளது என்றால் சாி. எனது தந்தைக்கு சிகிச்சை கொடுத்த மருத்துவமனை மருத்துவரை விசாாித்தால் தான் சிகிச்சை விவரங்கள், என் அப்பா இறந்ததற்கான காரணங்கள் தொியவரும் என்றால் சாி. என் அப்பா இறந்த பிறகு அவரை

புதைத்தார்கள். எனது அப்பா இறந்த பிறகு அவரை புதைப்பதற்கு முன்பு மருத்துவ சான்று வாங்கினேனா என்றால் இல்லை.என் அப்பாவிற்கு படுக்கை புண் ஏற்பட்டது என்பதற்கு மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா 24.10.2023 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் இறக்கவில்லை என்றாலும் அதனால் தான் அவரை புதைப்பதற்கு முன்பு மருத்துவ சான்று பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சாியல்ல. எனக்கு மற்றும் எனது தம்பி ராஜவேல் ஆகியோர்க்கு திருமணம் ஆகிவிட்டது. நானும் எனது தம்பியும் என் அப்பாவை சார்ந்து வாழவில்லை என்றாலும் அதனால் எங்களுக்கு இழப்பீடு கிடைக்காது என்றால் சாியல்ல. என் அப்பா சாலை விபத்தில் இறக்கவில்லை என்பதால் இந்த மனு நிலைக்கதக்கது அல்ல என்றால் சாியல்ல.

x

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.